MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP II & IIA
TEST 3 – DECEMBER 2022 – ANSWER KEY

Manidhanaeyam Free IAS Academy

(Run by Manidha Naeyam Charirable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: mntfreeias.com

TEST - 3 - மாதிரி விடைகள்

6 MARKS = 6 to 7 POINTS
12 MARKS = 12 to 14 POINTS
15 MARKS = 15 to 17 POINTS

- ✓ எளிமையான வாக்கிய அமைப்பு தேவை
- ✓ நீளமான வாக்கிய அமைப்பை தவிர்க்க வேண்டும்.
- ✓ விடைத்தாளில் கொடுக்கப்பட்ட இடைவெளிக்குள் விடையை எழுதி முடிக்க வேண்டும்.
- ✓ தனித்துவமான விடையை எழுதுவதற்கு பயிற்சி செய்யவும்.
- ✓ கால மேலாண்மையை கருத்தில் கொள்ளவும் 3 மணி நேரத்திற்குள் விடையை எழுதி முடிக்க வேண்டும்.
- ✓ SCERT பாட புத்தகங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவும், தேவை ஏற்படின் பிற பாட புத்தகங்களையும் பார்க்கவும்.
- ✓ முதன்மை தேர்வு தொடர்பான TNPSC அறிவுறுத்தல்களை கருத்தில் கொள்ளவும்.

தாள்-II
PAPER-II
பொது அறிவு
GENERAL STUDIES

அலகு - I / UNIT - I

<u>பிரிவு – அ / SECTION – A</u>

(15 x 6 = 90)

1. மின்காந்தத்தின் பண்புகள் மற்றும் பயன்களை பட்டியலிடுக.
State the characteristics and utility of electromagnets.

மின்காந்தவியல், பொறியியல் பயன்பாடுகளில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தவிர மருத்துவம், தொழிற்சாலை மற்றும் வானியலிலும் அது பெரிய மாற்றங்களை உருவாக்கியுள்ளது.

(1) **ஒலிபெருக்கி:**

1) ஒலி பெருக்கியின் உள்ளே, ஒரு நிலைக் காந்தத்தின் முன் மின்காந்தம் வைக்கப்படுகிறது. நிலைக் காந்தம் அசையாமல் இருக்குமாறும், மின்காந்தம் இயங்கும் வகையிலும் வைக்கப்பட்டுள்ளன. மின்காந்தச் சுருளின் வழியாக மின்சாரத்துடிப்புகள் கடந்து செல்லும் போது, அதன் காந்தப்புலத் திசை வேகமாக மாறுகிறது.
2) இது நிலைக்காந்தத்தால் ஈர்க்கப்பட்டும் விலக்கப்பட்டும் முன் பின் நகர்வதால் அதிர்வடைகிறது என்பதே இதன் பொருள். மின்காந்தம் காகிதம் அல்லது பிளாஸ்டிக் போன்ற நெகிழ்வான பொருட்களாலான ஒரு கூம்புடன் இணைக்கப்பட்டுள்ளது, இது அதிர்வுகளை அதிகரிக்கச் செய்து நமது காதுகளைச் சுற்றியுள்ள காற்றுக்கு ஒலி அலைகளை ஊடுருவச் செய்கிறது.

(2) **காந்தத்தூக்கல் தொடர்வண்டி:**

காந்தத்தூக்கல் முறையில் ஒரு பொருளானது மின்காந்தப் புலத்தினால் உயர்த்தப்படுகிறது. காந்தத்தூக்கல் தொடர்வண்டியில் இருவகைக் காந்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்று சக்கரத்தை விலக்கி தொடர் வண்டியை தண்டவாளத்தில் இருந்து மேலே தூக்குகிறது. மற்றொன்று வண்டியை முன்புறம் வேகமாகத் தள்ளுகிறது. தொடர்வண்டியானது, காந்தத் தத்துவத்தின் அடிப்படையில் வண்டியின் நிலைத் தன்மையையும், வேகத்தையும் கட்டுப்படுத்தக்கூடிய வழிகாட்டிகள் வழியாக நகர்கின்றது.

(3) **மருத்துவத்துறை:**

1) தற்போது மின்காந்தப் புலங்கள் புற்றுநோய்க்கான உடல் வெப்ப உயர்வு சிகிச்சைகள் மற்றும் காந்த ஒத்ததிர்வு தோற்றுருவாக்கல் (MRI) போன்ற மேம்பட்ட மருத்துவ உபகரணங்களில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மின்காந்தத் தத்துவத்தின் அடிப்படையில் செயல்படும் பிற உபகரணங்கள் மனித உடலைப் பற்றிய தகவல்களை எளிதில் ஸ்கேன் செய்து விடுகின்றன.

2) ஸ்கேனர்கள், x-ray உபகரணங்கள் மற்றும் பிற மருத்துவ உபகரணங்கள் பலவும் அவற்றின் செயல்பாட்டிற்கு மின்காந்தவியல் கொள்கை களைப் பயன்படுத்துகின்றன.

2. கால்வனோமீட்டரை எவ்வாறு அம்மீட்டராக மாற்றுவது?

How to convert a galvanometer into Ammeter?

1) மின்சுற்றில் பாயும் மின்னோட்டத்தை அளக்கப்பயன்படும் கருவியே அம்மீட்டராகும். அம்மீட்டர் மின்சுற்றில் பாயும் மின்னோட்டத்திற்கு மிகக் குறைந்த மின்தடையையே கொடுப்பதால் இது மின்சுற்றில் பாயும் மின்னோட்டத்தை தடுக்காது. எனவே மின்சுற்றில் பாயும் மின்னோட்டத்தை அளக்க, அம்மீட்டரை மின்சுற்றில் தொடரிணைப்பில் இணைக்க வேண்டும்.

2) கால்வனோமீட்டரை அம்மீட்டராக மாற்ற, அந்த கால்வனோ மீட்டருடன் குறைந்த மின்தடை ஒன்றை பக்க இணைப்பில் இணைக்க வேண்டும்.

3) இக்குறைந்த மின்தடைக்கு இணைதட மின்தடை (Shuntresistance) S என்று பெயர்.கால்வனோமீட்டரின் அளவுகோல் இப்போது ஆம்பியரில் குறிக்கப்பட்டு, அம்மீட்டரின் நெடுக்கம் இணைதட மின்தடையின் மதிப்பைப் பொறுத்து அமைகிறது.



அம்மீட்டர்

4) மின்சுற்றில் பாயும் மின்னோட்டம் I என்க. இம்மின்னோட்டம் A சந்தியை அடையும்போது இரு கூறுகளாகப் பிரிகிறது. AGE என்ற பாதை வழியே, R_g மின்தடை கொண்ட கால்வனோமீட்டர் வழியே பாயும் மின்னோட்டத்தை I_g என்க. இணைதட மின்தடை S வழியே ACDE பாதை வழியே பாயும் மின்னோட்டம் $(I - I_g)$ என்க.

5) இணைதட மின்தடையை சரிசெய்து முழு அளவுகோல் விலக்கத்தைக் காட்டும் வகையில் கால்வனோமீட்டர் வழியே பாயும் மின்னோட்டத்தைச் I_g சரி செய்ய வேண்டும். கால்வனோமீட்டருக்குக் குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாடும், இணைதட மின்தடைக்குக் குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாடும் ஒன்றுக்கொன்று சமமாகும்.

6) இங்கு இணைத்தடத்தின் மின்தடை மதிப்பு மிகக்குறைவு. எனவே, S / R_g இன் விகிதமும் குறைவாகவே இருக்கும். இதன்பொருள் R_a மதிப்பும் குறைவு என்பதாகும். அதாவது அம்மீட்டர் மின்சுற்றில் பாயும் மின்னோட்டத்திற்கு குறைவான மின்தடையையே அளிக்கும்.

7) எனவே மின்சுற்றில் அம்மீட்டரை தொடராக இணைக்கும்போது சுற்றின் மின்தடை மற்றும் மின்னோட்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதையும் ஏற்படுத்தாது. ஒரு நல்லியல்பு அம்மீட்டரின் மின்தடை சுழியாகும்.

8) ஆனால் நடைமுறையில் அம்மீட்டர் காட்டும் மின்னோட்டத்தின் அளவு, மின்சுற்றில் பாயும் மின்னோட்டத்தின் அளவைவிட சற்றுக் குறைவாகவே இருக்கும். $I_{\text{நல்லியல்பு}}$ என்பது நல்லியல்பு அம்மீட்டர் அளக்கும் மின்னோட்டம் எனவும் $I_{\text{இயல்பு}}$ என்பது அம்மீட்டர் அளக்கும் மின்சுற்றில் பாயும் மின்னோட்டம் எனவும் கொண்டால்.

3. சிறு குறிப்பு வரைக. **Write a short note on.**

i. மெக்லிவ் தொடர் வண்டி

Maglev train

மெக்லிவ் (Maglev) தொடர் வண்டிக்கு ‘‘(காந்த விலக்கத் தொடர்வண்டி) சக்கரங்கள் கிடையாது. கணினி மூலம் கட்டுப்படுத்தப்படும் மின்காந்தங்கள் மூலம் வலிமையான காந்த விசையானது கொடுக்கப்படுவதால் தண்டவாளங்களுக்கு மேலே இது மிதந்து செல்லும். இது உலகிலேயே மிகவும் வேகமான தொடர்வண்டியாகும். இது தோராயமாக 500 கிமீ / மணி. வேகத்தில் செல்லக்கூடியது.

ii. ஓமின் விதி

Ohm's Law

1) ஜார்ஜ்சைமன்ஓம் என்ற ஜெர்மன் இயற்பியலாளர் மின்னோட்டம் மற்றும் மின்னழுத்த வேறுபாடு ஆகியவற்றிற்கிடையேயான தொடர்பினை நிறுவினார். இதுவே ஓம் விதி எனப்படும்.
2) இவ்விதியின்படி மாறா வெப்பநிலையில், கடத்தி ஒன்றின் வழியே பாயும் சீரான மின்னோட்டம் கடத்தியின் முனைகளுக்கிடையே உள்ள மின்னழுத்த வேறுபாட்டிற்கு நேர்தகவில் அமையும்.

$$V=IR$$

மின்தடையாக்கிகள் தொடர் இணைப்பு

மின் தடையாக்கிகள் தொடராக உள்ள போது ஒவ்வொரு மின் தடையாக்கியின் வழியாகவும் ஒரே அளவு மின்னோட்டம் பாயும்.

$$R_S = R_1 + R_2 + R_3$$

மின்தடையாக்கிகள் பக்க இணைப்பு

பல மின்தடையாக்கிகள் பக்க இணைப்பில் இணைக்கப்படும் போது தனித்தனி மின்தடையாக்கிகளின் மின் தடையின் தலைகீழிகளின் கூடுதல் தொகுபயன் மின்தடையின் தலைகீழிகளுக்கு சமம். சம மதிப்புடைய 'n' மின்தடையாக்கிகள் பக்க இணைப்பில் இணைக்கப்படும் போது அதன் தொகுபயன் மின்தடை R / n ஆகும்.

$$\frac{1}{R_P} = \frac{1}{R_1} + \frac{1}{R_2} + \frac{1}{R_3}$$

iii. பாரடேயின் மின்னாற்பகுப்பு விதிகள்.

Faraday's Law

1) **ஃபாரடேயின் மின்காந்த தூண்டல் விதி:**

ஃபாரடேயின் மின்காந்த தூண்டல் விதி, ஃபாரடேயின் விதி என்றும் அழைக்கப்படுகிறது, இது மின்காந்தத்தின் அடிப்படை விதியாகும், இது ஒரு காந்தப்புலம் ஒரு மின்சுற்றுடன் எவ்வாறு தொடர்புகொண்டு மின்னோட்ட சக்தியை (EMF) உருவாக்குகிறது என்பதைக் கணிக்க உதவுகிறது. இந்த நிகழ்வு மின்காந்த தூண்டல் என்று அழைக்கப்படுகிறது.

2) **ஃபாரடேயின் மின்காந்த தூண்டலின் முதல் விதி:**

ஒரு கடத்தி ஒரு மாறுபட்ட காந்தப்புலத்தில் வைக்கப்படும் போதெல்லாம், ஒரு மின்னோட்ட விசை தூண்டப்படுகிறது. கடத்தி சுற்று மூடப்பட்டால், ஒரு மின்னோட்டம் தூண்டப்படுகிறது, இது தூண்டப்பட்ட மின்னோட்டம் என்று அழைக்கப்படுகிறது.

3) **ஃபாரடேயின் மின்காந்த தூண்டலின் இரண்டாவது விதி:**

ஒரு சுருளில் தூண்டப்பட்ட EMF ஆனது ஃப்ளக்ஸ் இணைப்பின் மாற்ற விகிதத்திற்கு சமம்.

4. சிறு குறிப்பு வரைக. **Write a short note on.**

i. மின்னல்

Lightning

1) மேகங்களுக்கிடையிலோ அல்லது மேகங்களுக்கும் புவிக்கும் இடையிலோ மின்னிறக்கம் நடைபெறுவதால் மின்னல் உருவாகிறது. இடியுடன் கூடிய மழை பெய்யும்போது காற்று மேல் நோக்கி வேகமாக நகர்கிறது. இந்தக் காற்றானது மிகச்சிறிய பனிப்படிகங்களை மேல் நோக்கி இழுத்துச் செல்கிறது.
2) அதே நேரத்தில் சிறிய நீர்த் துளிகள் மேலிருந்து கீழ் நோக்கி நகர்கின்றன. அவை ஒன்றுடன் ஒன்று மோதும்போது பனிப்படிகங்கள் நேர் மின்னூட்டமடைந்து மேல் நோக்கி நகர்கின்றன. நீர்த்துளிகள் எதிர் மின்னூட்டமடைந்து கீழ்நோக்கி நகர்கின்றன.
3) இதனால் மேகங்களின் மேற்பகுதி நேர்மின்னூட்டமுடைய துகள்களாலும் கீழ்பகுதி எதிர்மின்னூட்டமுடைய துகள்களாலும் நிறைந்திருக்கும். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று சந்திக்கும்போது நீர்த் துளிகளில் உள்ள

எலக்ட்ரான்களை பனிப்படிகத்தில் உள்ள நேர்மின் துகள்கள் ஈர்க்கின்றன. இதனால் மின்சாரம் உருவாகி மின்னல் தோன்றுகிறது.

ii. இடி

Thunder

1) மின்னலின் மூலம் மிகப்பெரிய அளவிலான மின்சாரம் மின்னிறக்கமடைந்து 30,000°C வெப்பநிலைக்கும் அதிகமான வெப்பம் உருவாகிறது. அதிக அளவிலான இந்த வெப்பத்தினால் காற்று விரைவாக விரிவடைந்து மீண்டும் விரைவாக சுருங்குகிறது. காற்று விரைவாக சுருங்கி விரிவதால் அங்கு ஒரு அதிர்ச்சி அலை உருவாகி மிகப்பெரிய சத்தமாக வெளிப்படுகிறது. இந்த சத்தம் இடி என அழைக்கப்படுகிறது.
2) புவிப் பரப்பிற்கும் மேகங்களுக்கும் இடையே உள்ள தூரம் அதிகமாக இருப்பதாலும் ஒளியின் திசைவேகம் ஒலியின் திசைவேகத்தைவிட மிகவும் அதிகம் என்பதாலும் சில நேரங்களில் இடிச் சத்தம் கேட்பதற்கு முன்னரே மின்னல் நம் கண்களுக்குத் தெரிகிறது.

iii. புவித்தொடுப்பு

Earthing

1) புவித்தொடுப்பு என்பது, மின்சாதனங்களில் இருக்கும் மின்காப்புறைகள் பழுதாகும்போது நமக்கு மின்னதிர்ச்சி ஏற்படாமல் இருப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கை ஆகும். மின்னிறக்கம் அடையும் மின்னாற்றலை குறைந்த மின்தடை கொண்ட கம்பியின் மூலம் புவிக்கு இடமாற்றம் செய்யும் முறையே புவித்தொடுப்பு என்று வரையறுக்கப்படுகிறது.
2) பல்வேறு மூலங்களிலிருந்தும் நமக்கு மின்னாற்றல் கிடைக்கிறது. மின்கலம் மின்னாற்றலை அளிக்கும் ஒரு மூலம் ஆகும். சுவர்க் கடிகாரங்கள், அலைபேசிகள் போன்றவற்றில் நாம் மின்கலத்தைப் பயன்படுத்துகிறோம்.
3) குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டி, சலவை இயந்திரம், தொலைக்காட்சிப் பெட்டி, மடிக்கணினி, நீர் கொதிகலன் போன்றவை இயங்குவதற்கு வீடுகளில் வழங்கப்படும் மின்சாரத்தை நாம் பயன்படுத்துகிறோம். வீட்டு உபயோகப் பொருள்களான கொதிகலன் மற்றும் மின்சலவைப் பெட்டி போன்றவை பொதுவாக மின்னோட்டக் கம்பி, நடுநிலைக் கம்பி மற்றும் புவித்தொடுப்புக் கம்பி ஆகிய மூன்று வகையான கம்பிகளைக் கொண்டிருக்கும்.
4) புவித்தொடுப்புக் கம்பியானது மின்சாதனங்களின் உலோகப் பரப்போடு இணைக்கப்பட்டிருக்கும். எதிர்பாராத விதமாக மின்னதிர்ச்சி ஏற்படுவதைத் தடுப்பதற்காக இவ்வாறு அது இணைக்கப்படுகிறது.
5) உதாரணமாக, மின்சலவைப் பெட்டியில் மின்னோட்டக் கம்பியானது மின்காப்புறை மூலம் முறையாகப் பாதுகாக்கப்பட்டிருக்கும். ஒருவேளை மின்கசிவு மூலம் மின்காப்புறை எரிந்து போனால் மின்னோட்டக் கம்பியானது உலோகப்பரப்பைத் தொடுவதற்கான வாய்ப்பு உள்ளது.
6) புவித் தொடுப்புக் கம்பியானது உலோகப்பரப்பில் முறையாக இணைக்கப்பட்டிருக்கும்போது, அதிகப்படியாக வரும் மின்னோட்டம் புவியில் மின்னிறக்கம் செய்யப்பட்டு, மின் அதிர்ச்சியிலிருந்து நாம் பாதுகாக்கப்படுகிறோம். புவியானது சிறந்த மின்கடத்தி என்பதால், பழுதடைந்த மின்காப்பு உறையிலிருந்து கசியும் மின்சாரம் அதன் வழியே பாய்ந்து செல்கிறது.
7) மின்னல் கடத்தி
8) உயரமான கட்டடங்களை மின்னல் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்க உதவும் ஒரு கருவி மின்னல் கடத்தி ஆகும். இந்த மின்னல் கடத்தியில் ஒரு உலோகத் தண்டானது கட்டடத்தின் மேற்பகுதியில் காற்றுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் பொருத்தப்பட்டிருக்கும். கட்டடங்கள் கட்டப்படும்போது, இந்த உலோகத் தண்டும் அதிலிருந்து வரும் தாமிரக் கம்பியும் கட்டடத்தின் சுவர்களில் பொருத்தப்படும்.

5. சிறு குறிப்பு வரைக. **Write a short note on.**

i. மின்னழுத்தம்

Voltage

1) மின்னழுத்த வரையறையின்படி, இது இரண்டு புள்ளிகளுக்கு இடையே உள்ள மின் ஆற்றலின் வித்தியாசம். மின்னூட்டத்தை ஒரு துருவத்திலிருந்து மற்றொரு துருவத்திற்கு கம்பி மூலம் நகர்த்துவதில் செய்யப்படும் வேலை இது.
2) இரண்டு புள்ளிகளுக்கு இடையே உள்ள மின்னழுத்தத்தை தீர்மானிக்க, நிலையான மின்சார புலம் மற்றும் மாறும் மின்காந்த புலம் இரண்டும் கருதப்படுகின்றன.

$$V=IR$$

ii. மின்னோட்டம்

Current

மின் மின்னோட்டம் என்பது ஒரு கடத்தியில் எலக்ட்ரான்களின் ஓட்ட விகிதம். மின்சாரத்தின் SI அலகு ஆம்பியர் ஆகும்.

$$I = Q/t$$

iii. மின்தடை

Resistance

சுற்றுவட்டத்தின் மின் தாடை/எதிர்ப்பு என்பது அதன் வழியாக பாயும் மின்னோட்டத்திற்கு பயன்படுத்தப்படும் மின்னழுத்தத்திற்கு இடையிலான விகிதமாகும்.

R=V/I

6. லித்தியம்-அயன் மின்கலத்தின் சாதகங்கள் மற்றும் பாதகங்கள் வரிசைப்படுத்துக.

List out the Advantages and disadvantages of lithium-ion Batteries.

நன்மைகள்:

1) அதிக ஆற்றல் அடர்த்தி
2) குறைந்த பராமரிப்பு
3) பல்வேறுபட்ட பயன்பாடுகள்
4) அதிக காலம் பயன்படும் தன்மை
5) குளிர்விக்க தேவையில்லை

தீமைகள்:

1) லித்தியம்-அயன் பேட்டரிகளுக்கு, மின்னழுத்தத்தை பராமரிக்க பாதுகாப்பு சுற்று தேவைப்படுகிறது
2) நிக்கல்-காட்மியத்தை விட லித்தியம்-அயன் பேட்டரிகளை உற்பத்தி செய்வது விலை அதிகம்
3) லித்தியம்-அயன் பேட்டரிகள் பயன்படுத்தும் காலம் அதிகமாகும் போது பிரச்சினையை எதிர்கொள்கின்றன.
4) லித்தியம்-அயன் பேட்டரிகள் முதிர்ச்சியடையாத தொழில்நுட்பமாக கருதப்படுகிறது.
5) வெடிக்கும் தன்மையுடையது
6) சில சமயங்களில் வெப்பமடையும்

7. ரேடார் வரையறு மற்றும் அதன் நடைமுறை பயன்பாடுகளை வரிசைப்படுத்துக.

Define Radar and list out its Pratical Applications.

1) ரேடாரின் முழு வடிவம் ரேடியோ கண்டறிதல் மற்றும் ரேஞ்சிங் ஆகும். இது ஒரு மின்னணு சாதனம் ஆகும், இது மைக்ரோவேவ் பிரிவு அல்லது ரேடியோ ஸ்பெக்ட்ரமின் அதி-உயர் அதிர்வெண்ணை வழங்குகிறது, இது ஒரு பொருளின் ஸ்பாட் அல்லது வரம்பைக் கட்டுப்படுத்த தடைகளை அடையாளம் காண உதவுகிறது. செயல்பாட்டு பொருளின் வேகம் மற்றும் ஒழுங்குமுறை ஆகியவற்றை ஆராய அல்லது அடையாளம் காணவும் இது பயன்படுத்தப்படலாம்.
2) இது இரண்டாம் உலகப் போரின் போது பல நாடுகளால் ரகசியமாக திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட்டது. 1940 இல் அமெரிக்க கடற்படை RADAR என்ற வார்த்தையை விவரித்தது.

ரேடாரின் பயன்பாடுகள்:

1) இராணுவம்
2) சட்ட அமலாக்கம்
3) விண்வெளி
4) சுற்றுச்சூழலின் ரிமோட் சென்சிங்
5) விமான வழிசெலுத்தல்
6) கப்பல் வழிசெலுத்தல்
7) விமானப் போக்குவரத்து

8. தொகுப்பு சில்லுகளை விவரி.

Explain Integrated Chips.

1) ஒரு தொகுப்புச் சுற்றானது IC அல்லது சில்லு அல்லது நுண்சில்லு என்றும் குறிப்பிடப்படுகிறது. இதில் சிலிக்கன் போன்ற குறைக்கடத்தியின் சிறு துண்டின் மீது சில ஆயிரம் முதல் மில்லியன் வரையிலான டிரான்சிஸ்டர்கள், மின்தடைகள்,மின்தேக்கிகள் தொகுக்கப்பட்டுள்ளன.
2) தொகுப்புச் சுற்றுக்கள் (IC க்கள்) ஆனவை நவீன எலெக்ட்ரானியலின் மைல்கல் ஆகும். தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் VLSI (மிக பெரும் அளவிலான தொகுப்பு-Very Large Scale Integration) என்ற சகாப்தத்தின் தோற்றம் ஆகியவற்றால், ஒரு தொகுப்புச்சில்லுவில் மிக அதிக அளவிலான டிரான்சிஸ்டர்களை பொருத்த இயலுகிறது.
3) சாதாரண சுற்றுகளைக் காட்டிலும், தொகுப்புச் சுற்றுக்கள் இரு முக்கிய நன்மைகளைக் கொண்டுள்ளன: விலை மற்றும் செயல்திறன் தொழில்நுட்ப வளர்ச்சியால் அளவு, வேகம் மற்றும் சில்லுகளின் கொள்ளளவு ஆகியவை மிக அதிக அளவு மேம்படுத்தப்பட்டுள்ளன.
4) தற்போது கணினிகள், செல்பேசிகள் மற்றும் இதர வீட்டு உபயோக இலக்கமுறை சாதனங்கள், அளவில் சிறியதான மற்றும்

விலை குறைவான தொகுப்புச் சுற்றுகளால் சாத்தியமாகி உள்ளது. தொகுப்புச் சுற்றுகளானது பெருக்கி, அலையியற்றி, நேரச்சுற்று, நுண்செயலி மற்றும் கணினி நினைவகம் ஆகியனவாகச் செயல்பட இயலும்.

5) இந்த மிகச்சிறிய தொகுப்புச் சுற்றுகள், இலக்கமுறை அல்லது தொடர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கணக்கீடுகளை மேற்கொள்ளவும் மற்றும் தரவைச் சேமிக்கவும் செய்கின்றன. இலக்கமுறை தொகுப்புச்சுற்றுகள் (Digital ICs) ஒன்று மற்றும் சுழி ஆகியவற்றின் மதிப்புகளால் இயங்கும் லாஜிக் கேட்களைப் பயன்படுத்துகின்றன. இலக்கமுறை தொகுப்புச்சுற்று ஒன்றிற்குக் கொடுக்கப்பட்ட ஒரு தாழ்வு சைகை 0 மதிப்பையும், ஒரு உயர்வு சைகை 1 மதிப்பையும் உருவாக்குகின்றது.

6) இலக்கமுறை தொகுப்புச்சுற்றுகள் கணினிகள், வலைப்பின்னல் கருவி மற்றும் பெரும்பாலான நுகர்வோர் எலக்ட்ரானியல் சாதனங்களிலும் பயன்படுகின்றன.

7) தொடர் தொகுப்புச்சுற்றுகள் அல்லது நேர்போக்குத் தொகுப்புச் சுற்றுகள் (Analog ICs or linear ICs) தொடர்ச்சியான மதிப்புகளுடன் இயங்குகின்றன. இதன் பொருள், ஒரு தொடர் தொகுப்புச்சுற்றின் பாகமானது எந்த ஒரு மதிப்பையும் பெற்று மற்றொரு மதிப்பிலான வெளியீட்டைத் தரும். நேர்போக்கு தொகுப்புச் சுற்றுகள் குறிப்பாகச் செவியுணர் மற்றும் ரேடியோ அதிர்வெண் பெருக்கத்தில் பயன்படுகின்றன.

9. செயற்கைக்கோள் தகவல்தொடர்பை விவரி
Explain Satellite Communication.

1) செயற்கைக்கோள் தகவல்தொடர்பானது செயற்கைக்கோள் வழியாக பரப்பி மற்றும் ஏற்பி இடையே சைகையைப் பரிமாற்றும் தகவல்தொடர்பின் ஒரு வகையாகும்.

2) தகவல் சைகையானது புவி நிலையத்தில் இருந்து, வானில் நிலைகொண்டுள்ள செயற்கைக்கோளுக்கு மேலிணைப்பு (Uplink) (அதிர்வெண் பட்டை 6 GHz) ஒன்றின் மூலமாகப் பரப்பப்படுகிறது. பின்னர் அங்குள்ள டிரான்ஸ்பான்டர் என்ற கருவியால் பெருக்கப்பட்டு, கீழிணைப்பு (Downlink) (அதிர்வெண் பட்டை 4 GHz) மூலமாக மற்றொரு புவி நிலையத்திற்கு மீண்டும் பரப்பப்படுகிறது.

3) அதிக அதிர்வெண் ரேடியோ அலை சைகைகள் நேர்க்கோட்டில் செல்லும்போது (நேர்க்கோட்டுப் பார்வை), உயரமான கட்டடங்கள் அல்லது மலைகள் அல்லது புவியின் வளைபரப்பு ஆகியவற்றை எதிர்கொள்ளக்கூடும்.

4) ஆனால் இந்த வகை தகவல்தொடர்பானது, செயற்கைக்கோள்கள் உதவியால் ரேடியோ சைகைகளை டிரான்ஸ்பான்டர் மூலம் பெருக்கி, மேலிணைப்புகள் மற்றும் கீழிணைப்புகள் வழியாக தொலைதூர இடங்களை சென்றடைய மறு ஒளிபரப்பு செய்கின்றது. எனவே இது வானில் உள்ள ரேடியோ மறு ஒளிபரப்பி (radio repeater) எனவும் அழைக்கப்படுகிறது. இதன் பயன்பாடுகள் அனைத்து துறைகளிலும் உள்ளன. அவற்றில் சில கீழே விவாதிக்கப்பட்டுள்ளன.

பயன்பாடுகள்:

செயற்கைக்கோள்களானது அவற்றின் பயன் பாடுகள் அடிப்படையில் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சில செயற்கைக்கோள்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

1) **வானிலை செயற்கைக்கோள்கள்:** இவை புவியின் வானிலை மற்றும் தட்பவெப்பநிலையைக் கண்காணிக்கப் பயன்படுகின்றன. மேகங்களின் நிறையை அளப்பதன் மூலம் மழை, அபாயகரமான சூறாவளி மற்றும் புயல்கள் ஆகியவற்றை முன்கணிப்பு செய்வதற்கு இந்தச் செயற்கைக்கோள்கள் நமக்கு உதவுகின்றன.

2) **தகவல்தொடர்பு செயற்கைக்கோள்கள்:** இவை தொலைக்காட்சி, வானொலி, இணையச் சைகைகள் ஆகியவற்றை பரப்புவதற்குப் பயன்படுகின்றன. நீண்ட தொலைவுகளுக்குப் பரப்ப, ஒன்றிற்கு மேற்பட்ட செயற்கைக்கோள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

3) **வழிநடத்தும் செயற்கைக்கோள்கள்:** கப்பல்கள், விமானங்கள் அல்லது வேறு எந்த பொருளின் புவிசார் அமைவிடத்தை கண்டறியும் பணிகளில் இவை ஈடுபடுகின்றன.

<u>பிரிவு - ஆ / SECTION - B</u>

10. தமிழகத்தில் கனிமவள உற்பத்தி மற்றும் அதன் வருவாய் ஆக்கம் குறித்து எழுதுக.
Write about Mineral resources production and its revenue generation scope in Tamilnadu.

தமிழ்நாட்டில் உள்ள கனிமங்களை மூன்று முக்கிய பிரிவுகளாக பிரிக்கலாம் அவை

1) பெருங்கனிமங்கள்
2) சிறு கனிமங்கள்
3) எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு தமிழகத்தில் கிடைக்கும் முக்கிய கனிமங்கள்

1) **பழுப்பு நிலக்கரி:** இவை தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் காணப்படுகிறது. இதன் முக்கிய பயன்கள் மின்சார உற்பத்தி மற்றும் பிறை எரிபொருள்கள்.

2) **கிராபைட்:** இவை காணப்படும் மாவட்டங்கள் சிவகங்கை, மதுரை. இவற்றின் முக்கிய பயன்பாடு மின் கடத்தாப் பொருட்கள்.

3) **சுண்ணாம்புக்கல்:** தமிழகத்தில் இவை காணப்படும் மாவட்டங்கள் அரியலூர், பெரம்பலூர், விருதுநகரம், சேலம், நாமக்கல் மற்றும் கரூர். இவற்றின் முக்கிய பயன்பாடு சிமெண்ட் உற்பத்தி, மருந்து பொருட்கள் தயாரிப்பு, ரசாயன பொருட்கள்

தயாரிப்பு, உலோகங்கள் தயாரிப்பு.

4) **மேக்னசைட்:** இவை காணப்படும் மாவட்டங்கள் தமிழ்நாட்டில் சேலம், நாமக்கல் மற்றும் கரூர். இவற்றின் முக்கிய பயன்பாடு வெப்பம் தாங்கி கற்கள், மெக்னீசியம் சிமெண்ட் மின் தடை கற்கள்.
5) **பாக்சைட்:** தமிழ்நாட்டில் காணப்படும் மாவட்டங்கள் சேலம் மற்றும் நாமக்கல். இவற்றின் முக்கிய பயன்பாடு அலுமினிய உலோகம் விமான உதிரி பாகங்கள்
6) **தாது மன்:** இவை திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் காணப்படுகிறது. இதன் முக்கிய பயன்கள் உராய்வு பொருட்கள் அணுசக்தி கனிதம்.
7) **மாலிபட்டினம்:** இந்தியாவில் இக்கனிமங்கள் காணப்படுகின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு. தமிழ்நாட்டில் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இவை கிடைக்கப்பெறுகிறது. இதன் முக்கிய பயன்கள் மின்கடத்திகள் மற்றும் கலவை.
8) **குவார்ட்ஸ்:** இவை தமிழ்நாட்டில் சேலம், நாமக்கல், கரூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் காணப்படுகிறது. இவை முக்கிய பயன்பாடுகள் கணினி சில்லுகள் மற்றும் கண்ணாடி பொருட்கள்.
9) **ஃபுல் ஸ்பேர்:** இவை தமிழ்நாட்டில் சேலம், நாமக்கல், கரூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் காணப்படுகிறது. இதன் முக்கிய பயன்பாடு பீங்கான் பொறுப்பு தயாரித்தல், ஓடு தயாரித்தல் மற்றும் வண்ணப் பொருட்கள் தயாரித்தல்.
10) **கால் சைட்:** இவை தமிழ்நாட்டில் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் காணப்படுகிறது. இதன் பயன்கள் சிமெண்ட் உற்பத்தி, ரசாயன பொருட்கள் உற்பத்தி மற்றும் மருந்து பொருட்கள் தயாரித்தல்.
11) **சிலிக்கா மணல்:** இதை தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் காணப்படுகிறது இதன் முக்கிய பயன்பாடு கண்ணாடி தொழிற்சாலை உலகு உற்பத்தி.

இந்தியாவைப் பொறுத்தவரை கனிம உற்பத்தியில் தமிழ்நாடு ஒரு முன்னணி மாநிலமாக உள்ளது தமிழ்நாடு அரசின் கனிம நிறுவனத்தின் அறிக்கையின்படி சுண்ணாம்புக்கல் சுமார் 670 மில்லியன் டன் இருப்பு உள்ளது அவற்றில் 200 மில்லியன் கடைசி ஆண்டில் வணிகம் செய்யப்பட்டுள்ளது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு பொருள்கள் சுமார் மூன்று லட்சம் 10 மில்லியன் டன் இருப்பு உள்ளது பெரும்பாலான கனிமங்கள் விற்பனையின் மூலம் தமிழக அரசுக்கு 2021 - 2022 ன் படி சுமார் ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் கிடைக்கப்பட்டுள்ளது இது முந்தைய ஆண்டுகளை காட்டிலும் சற்று குறைவானதாகும் தமிழக அரசு பல்வேறு கனிமங்களின் மூலம் வருவாய் ஆக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது இருப்பினும் வருவாய் குறைவுக்கான காரணத்தை கண்டறிந்து அவற்றை சீர்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது பின்வரு முக்கிய நடவடிக்கைகள் அரசின் மூலம் எடுக்கப்பட்டுள்ளன அவை

1) திறன்மிக்க கனிம நிர்வாகம்.
2) நீடித்த நிலையான சுரங்கப் பணிகளை மேற்கொள்ளுங்கள்
3) அறிவியல் பூர்வமாக அகழ்ந்தெடுத்தல்
4) முறையான மற்றும் நிலையான கனிம உற்பத்தியை மேற்கொள்ளுதல்
5) புதிய கனிம படிவங்களை கண்டறிதல்
6) கனிமங்களை தேவைக்கேற்ப அகழ்ந்தெடுத்தல்
7) அனுமதி இன்றி கனிமங்களை எடுக்கும் நபர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்
8) சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்தல்
9) கனிம நிர்வாகத்தை ஒழுங்குமுறை படுத்துதல்
10) ட்ரோன் போன்ற நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி கனிமங்களை கண்டறிதல்
11) குவாரிகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாத்தல்
12) கனிமங்களை சரியாக மதிப்பீடு செய்தல்
13) தேவைக்கேற்ப அனுமதி வழங்குதல்.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு கனிம வளங்களின் மூலம் வளமான வருவாயை பெருக்கி மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு வழிவகுத்தல்.

11. சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருவழித் திட்டத்தை விவரி.

Explain Chennai - Kanniyakumari Industrial Corridor project.

1) மாநிலத்தில் துறைமுகம் சார்ந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு கடற்கரை பொருளாதார பெருவழித் திட்டத்தின் ஒரு பகுதியான சென்னை கன்னியாகுமரி பெருவழித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தபட்டு வருகின்றது. இப்பெருவழி, மாநிலத்தின் 23 மாவட்டங்களை உள்ளடக்கியது. இத்திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி, நிதி உதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆசிய வளர்ச்சி வங்கி கீழ்க்காணும் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க அனுமதி அளித்துள்ளது:-

1) ரூபாய் 6641 கோடி மதிப்பீட்டில் 16 மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்துதல் திட்டம்,

2) ரூபாய் 4526 கோடி மதிப்பீட்டில் விருதுநகரில் 765 KV துணை மின் நிலையம் மற்றும் ஒட்டப்பிடாரத்தில் 400 KV துணை மின் நிலையம் மற்றும் இணைப்பு மின் பாதைகள் அமைத்தல்,

2) இப்பெருவழித் திட்ட பகுதியில் தொழில் முனையங்களை அமைப்பதற்காக, மதுரை-திண்டுக்கல்-விருதுநகர்-தேனி, தூத்துக்குடி-திருநெல்வேலி, இராமநாதபுரம், கடலூர்-நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை-சிவகங்கை மற்றும் அரியலூர்-பெரம்பலூர் ஆகிய ஆறு முனையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் மதுரை-திண்டுக்கல்- விருதுநகர்-தேனி மற்றும் தூத்துக்குடி-திருநெல்வேலி ஆகிய இரண்டு தொழில் முனையங்கள் முதல் கட்டமாக செயல்படுத்த. திட்டத்திற்கான பெருந்திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. தற்போது இப்பெருவழியில் தூத்துக்குடி, விருதுநகர், தேனி, சிவகங்கை, மணப்பாறை, இராமநாதபுரம் மற்றும் கங்கைகொண்டான் ஆகிய இடங்களில் தொழில் பூங்காக்களை சிப்காட் நிறுவனம் சொந்த நிதியில் அமைத்து வருகிறது. இந்த தொழில் முனையங்களில், விருதுநகர், தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, மணக்குடி (இராமநாதபுரம்) மற்றும் சக்கரக்கோட்டை (இராமநாதபரம்) ஆகிய பகுதிகளில் பெரும்பான்மையான நில எடுப்பு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு, தூத்துக்குடியில் பன்னாட்டு அறைகலன் பூங்கா, விருதுநகரில் பெரும் ஜவுளி பூங்கா, தேனியில் உணவுப் பூங்கா, சிவகங்கையில் பொதுத் தொழில் பூங்கா போன்ற துறை சார்ந்த தொழிற்பூங்காக்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்ட மேம்பாட்டிற்கு மேலும் நிதியுதவி பெற ஆசிய வளர்ச்சி வங்கியுடன் கலந்துரையாடல் நடைபெற்று வருகிறது.

12. இந்தியாவில் இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள் குறித்து எழுதுக.
Write a note on Iron and Steel industries of India.

வ. எண்	தொழிலகங்களின் பெயர்கள்	இடம் மற்றும் மாநிலம்	நிறுவப்பட்ட ஆண்டு	உற்பத்தி பொருட்கள்
1	டாட்டா இரும்பு எஃகு நிறுவனம்(TISCO)	ஜாம்ஷெட்பூர் - ஜார்க்கண்ட்	1911	தேனிரும்பு
2	இந்தியா இரும்பு எஃகு நிறுவனம்(isco)	பர்ன்பூர்,ஹிராப்பூர், குல்டி மேற்கு வங்காளம்	1972	தேனிரும்பு, கட்சா எஃகு
3	விஸ்வேஷ்வரியா இரும்பு எஃகு நிறுவனம்(VISL)	பத்ராவதி,கர்நாடகா	1923	கலப்பு தேனிரும்பு மற்றும் கடல் பாசி எஃகு
4	இந்துஸ்தான் எஃகு நிறுவனம் ரஷ்யா தொழில்நுட்ப உதவியுடன். (HSL)	பிலாய்-சத்தீஸ்கர்	1957	ரயில்வே மற்றும் கப்பல் கட்டும் உபகரணங்கள்,
5	இந்துஸ்தான் எஃகு நிறுவனம் ஜெர்மனியின் தொழில்நுட்ப உதவியுடன் (HSL)	ரூர்கேலா- ஒடிசா	1965	வெப்ப மற்றும் குளிர்ந்த உருளை தகடுகள் மின்முலாம் பூசப்பட்ட தகடுகள் மற்றும் மின்சாதன தகடுகள்.
6	இந்துஸ்தான் எஃகு நிறுவனம் இங்கிலாந்தின் தொழில்நுட்ப உதவியுடன் (HSL)	துர்காபூர், மேற்கு வங்காளம்	1959	உலோக கலவை, கட்டுமானபொருட்கள், இரயிவே உபகரணங்கள்.
7	இந்துஸ்தான் எஃகு நிறுவனம் ரஷ்யாவின் தொழில்நுட்ப உதவியுடன் (HSL)	பொகாரோ ,ஜார்கண்ட்	1972	இரும்பு கழிவு மற்றும் இரும்பு உலோகம்.
8	சேலம் எஃகு ஆலை	சேலம்-தமிழ்நாடு	1982	துருப்பிடிக்காத இரும்பு
9	விஜய நகர் எஃகு ஆலை.	டோர்நகல்-கர்நாடகா	1984	நீண்ட மற்றும் பட்டை எஃகுகள்
10	விசாகப்பட்டினம் எஃகு ஆலை(VSP)	விசாகப்பட்டினம், ஆந்திரபிரதேசம்	1981	வெப்ப உலோகம்

13. இந்திய தொழிற்சாலைகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் குறித்து விவாதிக்க.

Discuss the major challenges faced by industries of India.

1) மின் விநியோகத்தில் பற்றாக்குறை மற்றும் ஏற்ற இறக்கம்.
2) பெரிய அளவிலான நிலங்கள் கிடைக்காமை.
3) கடனுக்கான மோசமான அணுகல்.
4) கடன் வாங்கிய கடனுக்கான அதிக வட்டி விகிதம்.
5) தொழிலாளர்கள் கிடைக்காத நிலை.
6) ஊழியர்களின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி இல்லாதது.
7) தொழிற்பேட்டைகளுக்கு அருகில் சரியான வாழ்வதற்க்கான சூழல் இல்லாமை.
8) மூலப்பொருட்கள் பற்றாக்குறை.

14. பொதுநல வழக்கை வரையறுத்து அதன் முக்கியத்துவம் குறித்து விளக்குக.

Define Public Interest Litigation and write its importance.

பொது நல வழக்குகள் (PIL):

பொது நல வழக்கு (PIL) என்பது பொது மக்களின் நலத்தை பாதிக்கும் எந்த ஒரு விஷயம் குறித்து பாதிக்கப்பட்ட நபரோ அல்லது வேறு சில அமைப்புகளோ நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதாக சில வேலைகளில் நீதிமன்றம் பத்திரிகை செய்திகள் அடிப்படையிலும் மற்றும் நீதிமன்றங்களின் வரக்கூடிய ஆவணங்களின் அடிப்படையில் தன்னிச்சையாக இந்த பொதுநல வழக்கை தொடர்ந்து நீதிமன்றம் பொதுநலத்தை காக்க இயலும் எடுத்துக்காட்டாக காற்று மாசுபாடு, சுகாதாரமற்ற குடிநீர், மோசமான சாலைகள் போன்ற பொது நலன்களை பாதிக்கக்கூடிய எந்த ஒரு விஷயத்திற்கும் இதன் மூலம் தீர்வு காண முடியும் இது அமெரிக்க நீதித்துறையில் இருந்து 1970 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்டது இதை சமூக நடவடிக்கை வழக்கு என்றும் அழைக்கப்படும்.

பொது நல வழக்குகள் (PIL)முக்கியத்துவம்:

1) பொது மக்கள் நீதிமன்றத்தில் பிரிவு 32 மற்றும் 226 (உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம்) அணுகி சட்ட ரீதியான தீர்வுகளை பெறுவதே பொதுநல மனுவின் நோக்கமாகும்.
2) PIL என்பது சமூக மாற்றத்திற்கான ஒரு முக்கியமான கருவியாகும், மேலும் சட்டத்தின் ஆட்சியைப் பேணுவதற்கும் சட்டத்திற்கும் நீதிக்கும் இடையே சமநிலையை விரைவுபடுத்துவதற்கும் ஆகும்.
3) பொதுநல வழக்குகளின் அசல் நோக்கம் ஏழைகள் மற்றும் விளிம்புநிலை மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதே ஆகும்.
4) மனித உரிமைகள் மறுக்கப்பட்டவர்களைச் சென்றடையச் செய்வதற்கான முக்கியமான கருவியாகும்.
5) இது அனைவருக்கும் நீதி கிடைப்பதை ஜனநாயகப்படுத்துகிறது. திறமையான எந்தவொரு குடிமகனும் அல்லது அமைப்பும் அவ்வாறு செய்ய முடியாதவர்கள் அல்லது இல்லாதவர்கள் சார்பாக மனுக்களை தாக்கல் செய்யலாம்.
6) சிறைச்சாலைகள், புகலிடங்கள், பாதுகாப்பு இல்லங்கள் போன்ற அரச நிறுவனங்களின் நீதித்துறை கண்காணிப்புக்கு இது உதவுகிறது.
7) நீதித்துறை மறுஆய்வு என்ற கருத்தை செயல்படுத்துவதற்கு இது ஒரு முக்கியமான கருவியாகும்.
8) நிர்வாக நடவடிக்கையின் நீதித்துறை மறுஆய்வில் பொதுமக்களின் பங்கேற்பு அதிகரிக்கப்படுவது பொதுநல வழக்குகளின் தொடக்கத்தால் உறுதி செய்யப்படுகிறது.

15. ஆம்புட்ஸ்மேன் (Ombudsman) குறித்து ஒரு குறிப்பு வரைக.

Give an account on Ombudsman.

தோற்றம்:

1) 1809 – ஸ்வீடனில் அறிமுகம்.
2) 1966 – இந்தியாவில் நிர்வாக சீர்த்திருத்தக்குழு பரிந்துரை.
3) இதன் அடிப்படையில் லோக்பால், லோக் ஆயுக்தா உருவாக்கம்.

நோக்கம்:

1) மத்திய மாநில அரசு அதிகாரிகளுக்க எதிரான குற்றங்களை விசாரித்து நீதி வழங்குதல்.
2) பொதுமக்கள் குறைகள்.
3) ஊழல் போன்றவற்றால், பொது மக்களின் செயல்பாடுகள் பாதிக்கப்படுதல் (ம) காலதாமதமாதல் போன்றவை பொதுமக்களின் குறைகளாகும்.

குறைதீர்ப்பு ஆணையர்– 1966:

1) குடிமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்க அமைப்புகளின் நடவடிக்கைகளை முறைப்படுத்துதல்.
2) இவற்றுக்குத் திறமைமிக்க தலைமையைக் கொடுத்தல்.
3) அமைச்சகங்களில் குறை தீர்க்கும் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

ஆம்புட்மேன் உருவாக காரணங்கள்:

1) அரசாங்க நடவடிக்கைகளின் அதீத பெருக்கம்.
2) அதிகாரிகளிடம் உள்ள விருப்புரிமை அதிகாரங்கள்.
3) ஒப்படைக்கப்படும் சட்டங்கள்.
4) அதிகாரிகளிடமிருந்து குடிமக்களின் எதிர்பார்ப்புகள்.
5) ஆட்சித்துறையை சட்டமன்றத் துறையால் கட்டுப்படுத்த முடியாமை.
6) நீதிமன்றங்களால் ஏற்படும் காலதாமதம் பணச்செலவு.
7) குடிமக்களிடம் ஆட்சி முறை மீது நம்பகத்தன்மை குறைதல்.
8) சுதந்திரமான அமைப்பின் தேவை.

நன்மைகள்:

1) நடுவுநிலை தவறாதவர்.
2) அரசியல் தொடர்பற்றவர்.
3) வழக்கமான நிர்வாக படிநிலைக்கு அப்பாற்பட்டவர்.

குறைகள்:

1) ஆலோசனை அமைப்பு மட்டுமே.
2) எந்த நிர்வாக செயல்பாட்டையும் மாற்றி அமைக்க இயலாது.
3) அரசியலமைப்பு அங்கீகாரம் இல்லாதது.

16. லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா குறித்து எழுதுக.

Write about Lokpal and Lokayukta.

லோக்பால்:

1) 1966 முதல் நிர்வாக சீர்த்திருத்தக்குழு பரிந்துரை
2) ஸ்கேண்டி நேவியான் மாதிரி
3) 2013-ல் லோக்பால் மசோதா நிறைவேற்றப்பட்டு 2014-ல் சட்டமானது.

நோக்கம்:

1) பொதுப்பணிகளில் ஊழலை ஒழித்தல்
2) பிரதமர் உள்ளிட்ட பொதுப்பணியாளர்களை பொறுப்பேற்கச் செய்தல்

அமைப்பு:

1) தலைவர் - 1 (உச்ச / உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி)
2) உறுப்பினர்கள் - 8
3) 50% உறுப்பினர்கள் பட்டியல் இனத்தவர், சிறுபான்மையினர், பெண்கள்
4) பதவிக்காலம் - 5 வருடங்கள் / 70 வயது
5) மறுநியமனம் கிடையாது.

தேர்வுக்குழு:

1) பிரதமர்
2) மக்களவைத் தலைவர்
3) மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்
4) உச்சநீதிமன்ற நீதிபதி
5) சட்ட வல்லுநர்

16வது சட்டத்திருத்தம்:

1) அனைத்துப் பொதுப்பணியாளர்கள்
2) வெளிநாட்டு நன்கொடைகள் பெறும் அரசுசாரா அமைப்புகள் ஆகியவை அடங்கும்.

லோக்பாலின் வரம்புகள்:

- ✓ லோக்பால் எந்தவொரு அரசு ஊழியருக்கும் எதிராக தானே வழக்குத் தொடர முடியாது.
- ✓ புகாரின் தன்மையைக் காட்டிலும் வடிவத்திற்கு முக்கியத்துவம் தருகிறது.

- ✓ அரசு ஊழியர்களுக்கு எதிரான தவறான (ம) அற்பமான புகார்களுக்கு கடுமையான தண்டனையை அளிப்பதால் லோக்பாலுக்கு வரும் புகார்களைத் தடுக்கிறது.
- ✓ பெயரில்லா புகார்கள் அனுமதிக்கப்படுவதில்லை.
- ✓ புகார் அளிக்கப்பட்ட அரசு ஊழியருக்கு வழங்கப்படும் சட்ட உதவி
- ✓ புகார்களைத் தாக்கல் செய்ய 7 ஆண்டுகள் வரம்பு
- ✓ பிரதமருக்கு எதிரான புகார்களைக் கையாள்வதற்கான மிகவும் வெளிப்படையற்ற முறை

லோக் ஆயுக்தா:

1) லோக்பாலை முன் மாதிரியாகக் கொண்டு மாநிலங்கள் லோக் ஆயுக்தா அமைத்திடல் வேண்டும்.
2) மாநில அமைச்சர்கள், முதலமைச்சர் மீதான குற்றங்களை விசாரிக்கும்
3) 1971 – மகாராஷ்டிராவில் முதலில் அறிமுகம்
4) இதன் அதிகாரம் (ம) செயல்பாடு நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இல்லை.

பணிகளும் அதிகாரங்களும்:

1) மத்திய புலனாய்வு ஆணையம் உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகளை மேற்பார்வையிட்டு நெறிப்படுத்துதல்.
2) பிரதமர் உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் லோக்பால் அதிகாரக் கட்டுப்பாட்டின் கீழ் வருவர்.
3) மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் லோக்பாலால்பணி மாற்றம் செய்யப்படலாம்.
4) வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.
5) மத்திய புலனாய்வுத்துறை லோக்பாலின் ஒப்புதலுடன் வழக்குரைஞர் குழுவை நியமிக்கலாம்.
6) புகார் 8 வது அட்டவணையில் உள்ள மொழியில்.
7) புகார் அளித்தவரை பாதுகாத்தல்.

குறை:

1) ஆலோசனை அமைப்பு மட்டுமே.
2) தண்டிக்கும் அதிகாரம் இல்லை.
3) நீதிபதி, இராணுவம், கடற் எல்லைப்படை, உளவுத்துறைக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
4) லோக்பாலின் வெற்றி அதன் செயல்பாட்டைப் பொறுத்தே உள்ளது.
5) இதன் நியமனம் அரசியல் செல்வாக்கிலிருந்து விடுபடவில்லை.
6) நியமனத்தில் வெளிப்படைத்தன்மை அவசியம்.
7) அரசியலமைப்பு அங்கீகாரம் இல்லாமை.
8) மாதத்திற்கு, மாநிலம் இதன் அமைப்பு முறை வேறுபடுதல்

செயல்முறை:

1) 60 நாட்களில் அறிக்கை
2) 30 நாட்களில் முடிவு
3) அதிகபட்ச கால அவகாசம் – 2 வருடங்கள்

சிறப்பம்சங்கள்:

1) சுதந்திரமான அமைப்பு.
2) அரசியல் தலையீடு அற்றது.
3) விசாரணை வெளிப்படையானது.
4) இது உரிமையியல் நீதிமன்ற (Civil court) அதிகாரம் பெற்றுள்ளது.

17. **உச்ச நீதிமன்ற கொலீஜியம் அமைப்பு மற்றும் தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் (NJAC) குறித்து ஒரு குறிப்பு வரைக.**
Give an account on Supreme Court Collegium System and National Judicial Appointments Commission (NJAC).

கொலீஜியம் அமைப்பு:

1) கொலீஜியம் அமைப்பு "மூன்றாவது நீதிபதிகள் வழக்கு (1998)" மூலம் உருவாக்கப்பட்டது மற்றும் இது 1998 முதல் நடைமுறையில் உள்ளது. இது உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் நீதிபதிகளின் நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.
2) இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலோ அல்லது அடுத்தடுத்த திருத்தங்களிலோ கொலீஜியம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.
3) SC கொலீஜியம் CJI (இந்திய தலைமை நீதிபதி) தலைமையில் உள்ளது மற்றும் நீதிமன்றத்தின் நான்கு மூத்த நீதிபதிகளை உள்ளடக்கியது.

4) ஒரு HC கொலீஜியம் அதன் தலைமை நீதிபதி மற்றும் அந்த நீதிமன்றத்தின் நான்கு மூத்த நீதிபதிகளால் வழிநடத்தப்படுகிறது.
5) தலைமை நீதிபதி மற்றும் SC கொலீஜியத்தின் ஒப்புதலுக்குப் பிறகுதான் உயர் நீதிமன்றக் கல்லூரியால் நியமனம் செய்யப் பரிந்துரைக்கப்படும் பெயர்கள் அரசாங்கத்திற்குச் சென்றடையும்.

தேசிய நீதித்துறை நியமன ஆணையம்:

1) 1993 ஆம் ஆண்டின் தீர்ப்பின் அடிப்படையில் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு பெஞ்ச், தேசிய நீதிபதிகள் நியமன ஆணையச் சட்டம் (NJAC) மற்றும் அரசியலமைப்பு (தொண்ணூற்று ஒன்பது திருத்தம்) சட்டம், 2014 ஆகியவற்றை அக்டோபர் 2015 இல் அரசியலமைப்பிற்கு முரணானது என்று அறிவித்தது.
2) உச்ச நீதிமன்ற நீதிபதி நியமனம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதி நியமனம் மற்றும் இடமாற்றம் ஆகியவற்றுக்கான பெயர்களை NJACயும் பரிந்துரைக்கும்.

NJAC – ன் கலவை

1) இந்திய தலைமை நீதிபதி
2) உச்ச நீதிமன்றத்தின் 2 மூத்த நீதிபதிகள்
3) இந்தியாவின் சட்ட அமைச்சர்
4) தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட 2 முக்கிய உறுப்பினர்கள்

18. இந்தியாவில் நிர்வாக தீர்ப்பாயங்களின் பங்களிப்பு குறித்து ஆராய்க.
Analyse the role of Administrative Tribunals in India.

1) 1976 இன் 42வது திருத்தச் சட்டம் இந்திய அரசியலமைப்பில் தீர்ப்பாயங்களை இணைத்தது.
2) இதில் 323 A மற்றும் 323 B ஆகிய பிரிவுகள் அடங்கும், இது நிர்வாக மற்றும் பிற சிக்கல்களைக் கையாள தீர்ப்பாயங்களை நிறுவியது.
3) பிரிவு 323 A, நிர்வாக தீர்ப்பாயங்களைப் பற்றியது, அதேசமயம் பிரிவு 323-B மற்ற விஷயங்களுக்கான தீர்ப்பாயங்களைக் கையாள்கிறது.
4) நிர்வாக தீர்ப்பாயங்கள் தகராறுகளை தீர்ப்பது, அரசு பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் நபர்களின் குறைகளை தீர்க்க போட்டியிடும் கட்சிகளுக்கு இடையே உள்ள உரிமைகளை தீர்மானிப்பது மற்றும் பிற செயல்பாடுகளை செய்கிறது.
5) இது அரசின் நீதித்துறை அதிகாரத்தில் உள்ளது மற்றும் அதன் மூலம் தூய நிர்வாக செயல்பாடுகளில் இருந்து வேறுபடுத்தப்பட்ட அரை-நீதித்துறை செயல்பாடுகளை செய்கிறது.
6) இது இயற்கை நீதியின் கொள்கைகளைப் பின்பற்றுகிறது மற்றும் நீதித்துறையில் செயல்படக் கடமைப்பட்டுள்ளது.
7) இது வெளிப்படையாகவும், நியாயமாகவும், பாரபட்சமின்றியும் செயல்படுகிறது.
8) இது சிவில் நடைமுறை நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்ட கடுமையான நடைமுறை விதிகள் மற்றும் சான்றுகளால் கட்டுப்படுத்தப்படவில்லை.

அலகு – II

UNIT - II

(10 x 12 = 120)

1. மின்மோட்டார் என்றால் என்ன? அதன் அமைப்பு மற்றும் செயல்படும் விதத்தை விவரி.
What is electric motor? Explain its structure and working Principle.

1) மின் ஆற்றலை இயந்திர ஆற்றலாக மாற்றும் கருவியே மின் மோட்டார் ஆகும். நவீன வாழ்க்கையில் மின்சார மோட்டார்கள் முக்கியமானவை. அவை தண்ணீர் பம்ப், மின்விசிறி, சலவை இயந்திரம், சாறுபிழியும் கருவி, மாவரைக்கும் இயந்திரம் முதலியனவற்றில் பயன்படுத்தப்படுகின்றன.
2) ஒரு காந்தப்புலத்தில் வைக்கப்படும் ஒரு கடத்தியில் ஒரு விசையானது செயல்பட்டு அக்கடத்தியை இயங்கச் செய்கிறது என நாம் ஏற்கனவே படித்தோம். இதுவே மின் மோட்டாரின் தத்துவமாக உள்ளது.
3) ஒரு மோட்டார் எவ்வாறு இயங்குகிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு, ஒரு நிலையான காந்தப்புலத்தின் உள்ளே வைக்கப்படும் மின் சுருள் ஒன்றின் மீது திருப்பு விளைவு எவ்வாறு ஏற்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.
4) ஒரு எளிய கம்பிச் சுருள் ஒரு காந்தத்தின் இரு துருவங்களுக்கு நடுவே வைக்கப்பட்டுள்ளது. தற்போது கம்பிச் சுருளின் AB எனும் பிரிவைப் பாருங்கள். மின்னோட்டத்தின் திசை B ஐ நோக்கிச் செல்கிறது, ஆனால் கடத்திப் பிரிவு CD யில் மின்னோட்டதிசை எதிராக இருக்கும்.

5) கடத்திப் பிரிவு AB யிலும் CD யிலும் மின்னோட்டம் எதிரெதிர் திசைகளில் செல்வதால், பிளெமிங்கின் இடது கை விதியின் படி அவற்றின் இயக்கத்திசைகளும் எதிரெதிராக இருக்கும். கம்பிச் சுருளின் இரு முனைகளிலும் விசையானது எதிரெதிர் திசைகளில் இருப்பதால் அவை சுழல்கின்றன.



6) மின்னோட்டமானது ABCD வழியாக இருந்தால், கம்பிச் சுருள் முதலில் கடிகாரத் திசையிலும் பின் எதிர் திசையிலும் சுழலும். கம்பிச் சுருள் ஒரே திசையில் அதாவது கடிகாரத்திசையில் இயங்க வேண்டுமானால் மின்னோட்டமானது, சுழற்சியின் முதல் பாதியில் ABCD வழியாகவும் இரண்டாவது பாதியில் DCBA வழியாகவும் பாய வேண்டும். மின்னோட்டத்தின் திசையை மாற்ற, பிளவு வளைய திசைமாற்றி எனும் ஒரு சிறிய கருவி பயன்படுத்தப்படுகிறது.

7) பிளவு வளையத்தில் உள்ள இடைவெளியானது முனையம் X மற்றும் Y உடன் இணைந்திருக்கும்போது சுருளில் மின்னோட்டம் இருப்பதில்லை. ஆனால், சுருள் நகர்வதால், அது தொடர்ந்து முன்னோக்கி நகர்ந்து இரு பிளவு வளையங்களில் ஏதாவது ஒன்று கார்பன் தூரிகைகள் X மற்றும் Y யுடன் தொடர்பு கொள்ளும். இந்த மின்னோட்டத் திருப்புதல் ஒவ்வொரு அரைச் சுழற்சியிலும் நிகழ்ந்து கம்பிச்சுருளில் தொடர்ச்சியான சுழற்சியை ஏற்படுத்துகிறது.

சுருளின் சுழற்சி வேகம் கீழ்க்கண்ட காரணிகளால் அதிகரிக்கப்படலாம்:

1) கம்பிச் சுருளிலுள்ள மின்னோட்டத்தின் வலிமையை அதிகரித்தல்.
2) கம்பிச் சுருளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
3) கம்பிச் சுருளின் பரப்பளவை அதிகரித்தல்
4) காந்தப்புலத்தின் வலிமையை அதிகரித்தல்

2. காஸ் விதியை விவரித்து மற்றும் அதன் நடைமுறை பயன்பாடுகளை வரிசைப்படுத்துக?

Explain Gauss Law and list out its Pratical Applications?

காஸ் விதி

1) காஸ் விதியின்படி, மூடிய மேற்பரப்புடன் இணைக்கப்பட்ட மொத்த ஃப்ளக்ஸ் மூடிய மேற்பரப்பால் இணைக்கப்பட்ட மின்னூட்டத்தின் 1/ε0 மடங்கு ஆகும்.
2) எடுத்துக்காட்டாக, 'a' விளிம்பின் கனசதுரத்திற்குள் ஒரு புள்ளி கட்டணம் q வைக்கப்படுகிறது. இப்போது, காஸ் சட்டத்தின்படி, கனசதுரத்தின் ஒவ்வொரு முகத்திலும் ஃப்ளக்ஸ் q/6ε0 ஆகும்.
3) மின்சார புலம் என்பது மின்சாரத்தைப் பற்றிய அறிவின் அடிப்படைக் கருத்து. பொதுவாக, மேற்பரப்பின் மின்சார புலம் கூலொம்பின் சட்டத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கணக்கிடப்படுகிறது, ஆனால் மூடிய மேற்பரப்பில் மின்சார புல விநியோகத்தைக் கணக்கிட, காஸ் சட்டத்தின் கருத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.
4) இது ஒரு மூடிய மின் கட்டணம் அல்லது மூடப்பட்ட மூடிய மேற்பரப்பில் இருக்கும் மின் கட்டணம் ஆகியவற்றை விளக்குகிறது.

காஸ் விதி பயன்பாடுகள்:

1) ஒரே மாதிரியான சார்ஜ் செய்யப்பட்ட முடிவிலா நேரான கம்பி காரணமாக மின்சார புலம்.
2) ஒரே மாதிரியான சார்ஜ் செய்யப்பட்ட எல்லையற்ற தட்டுத் தாள் காரணமாக மின்சார புலம்.
3) ஒரே மாதிரியான சார்ஜ் செய்யப்பட்ட மெல்லிய கோள ஷெல் காரணமாக மின்சார புலம்.
4) காஸியன் மேற்பரப்பைத் தேர்ந்தெடுங்கள், மின்சார புலத்தின் மதிப்பீடு எளிதாகிறது.
5) சிக்கல்களை எளிதாக்க சமச்சீர்மையைப் பயன்படுத்தவும்.
6) நினைவில் கொள்ளுங்கள், காஸியன் மேற்பரப்பு உண்மையான மேற்பரப்புடன் ஒத்துப்போக வேண்டிய அவசியமில்லை, அதாவது காஸியன் மேற்பரப்புக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கலாம்.

3. மீத்திறன் கணிப்பொறி என்றால் என்ன? இந்தியாவில் மீத்திறன் கணிப்பொறி தோன்றி வளரும் விதத்தை குறித்து எழுதுக.

What is supercomputer? Trace the origin and development of supercomputers in India.

சூப்பர் கம்ப்யூட்டர்:

1) சாதாரண பயன்பாட்டுக் கணினியுடன் ஒப்பிடும்போது சூப்பர் கம்ப்யூட்டர்கள் அதிக அளவிலான கம்ப்யூட்டிங் செயல்திறனைக் கொண்டுள்ளன.
2) அதன் செயல்திறன் FLOPS இல் அளவிடப்படுகிறது (ஒரு நொடிக்கு மிதக்கும் புள்ளி செயல்பாடுகள்).
3) அதிக வேகம் மற்றும் சிறந்த நினைவகம் ஆகியவை சூப்பர் கணினியின் இரண்டு தேவைகள்.
4) செயல்திறன் பொதுவாக petaflops இல் மதிப்பிடப்படுகிறது (1 தொடர்ந்து 15 பூஜ்ஜியங்கள்). நினைவகம் வழக்கமான கணினியை விட சராசரியாக 250000 மடங்கு ஆகும்.

சூப்பர் கணினியின் தோற்றம்:

1) இந்தியாவின் முதல் சூப்பர் கம்ப்யூட்டர் பரம் 8000 ஆகும்.
2) 1991 இல் உருவாக்கப்பட்டது, இது ''சூப்பர் கம்ப்யூட்டிங்கில் இந்தியாவின் முன்முயற்சியின் கட்டிடக் கலைஞர்'' என்று அழைக்கப்படும் விஜய் பி பக்தரால் உருவாக்கப்பட்ட ஜிகாஃப்ளாப் சூப்பர் கம்ப்யூட்டர்களின் தொடர் ஆகும்.
3) PARAM என்பது 'பேரலல் மெஷின்' என்பதன் சுருக்கம் மற்றும் மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையத்தால் (CDAC) உருவாக்கப்பட்டது. வெளிநாடுகளில் இருந்து சூப்பர் கம்ப்யூட்டர்களை வாங்குவதில் உள்ள சிக்கல்கள் இந்தியாவின் முதல் உள்நாட்டு சூப்பர் கம்ப்யூட்டரின் வளர்ச்சியில் உச்சத்தை அடைந்தது.
4) 256 - முனை இயந்திரமாக உருவாக்கப்பட்டது, இது ஜெர்மனி, இங்கிலாந்து மற்றும் ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.
5) இந்தியாவின் வேகமான சூப்பர் கம்ப்யூட்டர் பரம் சித்தி-AI ஆகும்.
6) PARAM வரிசை சூப்பர் கம்ப்யூட்டர்களில் PARAM 8600, PARAM 9000 மற்றும் PARAM 10000 ஆகியவை அடங்கும். அவை பொது மற்றும் தனிப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.
7) PARAM – Siddhi - உலக அளவில், தரவரிசையில் 62 - ஆம் இடம் பெற்றுள்ளது.

தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மிஷன்:

1) தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மிஷன் (NSM) 2015 இல் தொடங்கப்பட்டது, இந்தியாவை சூப்பர் கம்ப்யூட்டிங்கில் சிறந்து விளங்கும் நாடுகளில் ஒன்றாக மாற்றும் நோக்கத்துடன் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சவாலான பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனை மேம்படுத்துகிறது.
2) அது அந்தந்த துறைகளில் உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சியை மேற்கொள்ள விஞ்ஞான சமூகத்தை அவாண்ட்-கார்ட் தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்தவும் முயற்சித்தது.
3) இது ''டிஜிட்டல் இந்தியா'' மற்றும் ''இந்தியாவில் தயாரிப்போம்'' திட்டத்திற்கு உதவுகிறது.

4. மின்சார திருத்த மசோதா, 2022. கூர்ந்து ஆராய்க.

Critically examine the Electricity (Amendment) Bill, 2022.

மின்சாரத் திருத்த மசோதா, 2022:

மின்சாரத் திருத்த மசோதா, 2022, பல வீரர்களுக்கு மின்சாரம் வழங்குபவர்களின் விநியோக நெட்வொர்க்குகளுக்கு திறந்த அணுகலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் நுகர்வோர் எந்த சேவை வழங்குநரையும் தேர்வு செய்ய அனுமதிக்கிறது.

இந்த மசோதா மின்சாரச் சட்டம் 2003ஐத் திருத்த முயல்கிறது:

1) அனைத்து உரிமதாரர்களாலும் விநியோக நெட்வொர்க்குகளைப் பயன்படுத்துவதை எளிதாக்குதல், போட்டியை செயல்படுத்துதல், விநியோக உரிமதாரர்களின் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் நுகர்வோருக்கான சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் மின்சாரத் துறையின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றின் நோக்கத்துடன் பாரபட்சமற்ற ''திறந்த அணுகல்'' விதிகளின் கீழ்.
2) விநியோக உரிமதாரரின் விநியோக வலையமைப்பிற்கு பாரபட்சமற்ற திறந்த அணுகலை எளிதாக்குதல்.
3) பொருத்தமான கமிஷன் மூலம் அதிகபட்ச உச்சவரம்பு மற்றும் குறைந்தபட்ச கட்டணத்தை கட்டாயமாக நிர்ணயிப்பது தவிர, ஒரு வருடத்தில் தரப்படுத்தப்பட்ட மறுசீரமைப்புக்கு ஏற்ப ஏற்பாடுகளை செய்ய.
4) தண்டனையின் விகிதத்தை சிறை அல்லது அபராதத்திலிருந்து அபராதமாக மாற்றுதல்.
5) கட்டுப்பாட்டாளர்களால் டிஸ்சார்ஜ் செய்யப்படும் செயல்பாடுகளை வலுப்படுத்த.

மசோதாவுக்கு எதிரான வாதங்கள்:

1) அரசியலமைப்பு ஏழாவது அட்டவணையின் பட்டியல் III இன் ஷரத்து 38 இல் 'மின்சாரம்' பட்டியலிடப்பட்டுள்ளது, எனவே மத்திய மற்றும் மாநில அரசுகள் இந்த விஷயத்தில் சட்டங்களை உருவாக்க அதிகாரம் உள்ளது.

2) முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மூலம், இந்திய அரசியலமைப்பின் 'அடிப்படை கட்டமைப்பின்' ஒரு பகுதியான இந்திய அரசியலின் கூட்டாட்சி தத்துவம் மீறப்படுகிறது.
3) விவசாயிகள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கான மின்சாரம் இறுதியில் இல்லாமல் போகும்.
4) அரசாங்க டிஸ்காம்கள் அல்லது விநியோக நிறுவனங்களுக்கு மட்டுமே உலகளாவிய மின்சாரம் வழங்கல் கடமைகள் இருக்கும்.
5) எனவே, தனியார் உரிமதாரர்கள் லாபம் ஈட்டும் பகுதிகளில் – தொழில்துறை மற்றும் வணிக நுகர்வோருக்கு மின்சாரம் வழங்க விரும்புவார்கள்.
6) இது நடந்தால், லாபம் ஈட்டும் பகுதிகள் அரசாங்க டிஸ்காம்களிடமிருந்து பறிக்கப்பட்டு அவை நஷ்டம் தரும் நிறுவனங்களாக மாறும்.

5. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்கு திறவுகோலாக செயல்படும் முகமைகளின் செயல்பாடுகளை விவரிக்க.
Elucidate the role of agencies that have played a key role in industrial development and expansion in Tamilnadu.

1) **தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் - வரையறுக்கப்பட்டது (TIC - Tamil Nadu Industrial Investment Corporation Ltd) 1949.**
2) புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் தற்போதுள்ள தொழில்பிரிவுகளைபெருக்குவதற்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமானது குறைந்த அளவிலான நிதி உதவியைச் செய்கிறது. அனைத்து வகையான தொழில் நிறுவனங்களுக்கும் உதவும் என்றாலும் குறிப்பாக 90% மிகச்சிறு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இது உதவுகிறது.
3) **தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டு கழகம் (TIDCO - Tamil Nadu Industrial Development Corporation) 1965.**
4) நம் மாநிலத்தில் தொழில்துறை பூங்காக்கள் நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் உதவும் மற்றுமொரு அரசு நிறுவனமாகும்.
5) **தமிழ்நாடு சிறுதொழில் கழகம் (TANSI – Tamil Nadu Small Industries Corporation Ltd) 1965.**
6) தொழில் மற்றும் வணிக நிறுவனங்களால் அமைப்புத் துறையில் நிறுவப்பட்டு, செயல்படுத்தப்பட்டு, வரும் சிறுதொழில் அமைப்புகளை 1965இல் தமிழ்நாடு சிறுதொழில் கழகமானது (TANSI) தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. சிறு நிறுவனங்களுக்காக நிறுவப்பட்ட முதல் தொழில்துறை நிறுவனமாகும்.
7) **தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO - Tamil Nadu Small Industries Development Corporation) 1970.**
8) தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO) என்பது 1970ல் தமிழக அரசால் நம் மாநிலத்தில் சிறுதொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். சிறு தொழிற்பிரிவின் புதிய நிறுவனங்களுக்கு மானியம் மற்றும் தொழிற் நுட்ப உதவிகளையும் இந்த நிறுவனம் வழங்குகிறது.
9) **தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT - State Industries Promotion Corporation of Tamil Nadu), 1971.**
10) தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (Sipcot) என்பது 1971 ல் தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டு, தொழிற் தோட்டங்களை அமைத்தது.
11) தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம் (Guidance Bureau) முதலீட்டாளர்கள் வழிகாட்டுதல்.

6. இந்தியாவில் தமிழகம் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஓர் முன்னோடி- காரணங்களை ஆராய்க.
Tamilnadu is the Pioneer in Information Technology industry in India- Analyse the reasons.

1) இந்தியாவில் ஒரு விரிவான தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.
2) 1997 ஆம் ஆண்டிலேயே, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்காக, தகவல் தொழில்நுட்பத் துறைக்கான தொழில்துறை சார்ந்த கொள்கையை மாநில அரசு வெளியிட்டது.
3) மாநிலத்தின் வளர்ச்சியின் இயந்திரமாக தகவல் தொழில்நுட்பத் துறையில் கவனம் செலுத்துதல்.
4) இருப்பினும், தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்ட மாற்றத்தின் வேகம் இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டியதாயிற்று. 2002 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு ஒரு புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கையை வெளியிட்டது, இது மாநிலத்தில் செழிப்பை வெளிப்படுத்தவும், தமிழ்நாட்டை அறிவு அதிகாரம் பெற்ற மாநிலமாக மாற்றவும் ஐ.டி.

5) இணையத்தின் வருகையானது உலகை ஒரு உலகளாவிய கிராமமாக மாற்றியுள்ளது மற்றும் உலகளவில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை வழங்கும் சகாப்தத்தை உருவாக்கியுள்ளது.
6) இந்தப் புரட்சி அறிவுத் துறையில் (IT மற்றும் ITES தொழில்கள்) நான்கு மில்லியனுக்கும் அதிகமான வேலைகளை உருவாக்கும்.
7) தமிழ்நாடு அதன் படித்த பணியாளர்கள் மற்றும் சிறந்த நிர்வாகத்தின் காரணமாக இந்த சிறந்த வாய்ப்பைப் பயன்படுத்த தனித்துவமாக தயாராக உள்ளது.
8) தமிழ்நாட்டில் ITES முதலீட்டின் நன்மைகளை முன்னிலைப்படுத்த தமிழ்நாடு அரசு 2005 இல் ITES கொள்கையை வெளியிட்டது.
9) இதைத் தொடர்ந்து தகவல் தொழில்நுட்பத் துறையில் மாற்றத்தின் வேகத்தைத் தக்கவைக்க, ICT கொள்கை 2018 அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது.
10) தரமான உயர்கல்வி நிறுவனங்கள்.
11) ELCOT நிறுவனத்தின் மூலம் IT வளர்ச்சிக்கான உகந்த கட்டமைப்பு.
12) அதிகமான தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் (IT Parks) கொண்ட மாநிலம். **எடுத்துக்காட்டு:** (TIDEL Park, Chennai)



* Source from STPI and MEPZ

7. ஏதேனும் இரண்டிற்கு விடை அளிக்க. **Attemt Any two**

i. டெல்லி - மும்பை தொழில்துறை வழித்தடம்.

Delhi – Mumbai Industrial Corridor.

டெல்லி-மும்பை தொழில்துறை வழித்தடம் (DMIC)

1) உத்தரப் பிரதேசம், ஹரியானா, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்டிராவை உள்ளடக்கியது.
2) இந்த பாதையானது, இந்தியாவின் அரசியல் தலைநகரான டெல்லி மற்றும் வர்த்தக தலைநகரான மும்பைக்கு இடையே 1483 கிமீ நீளத்தை உள்ளடக்கியது.
3) 100 பில்லியன் அமெரிக்க டாலர் திட்டத்திற்கு இந்திய அரசு, ஜப்பானிய நிறுவனங்களின் முதலீடுகள் மற்றும் கடன்கள் இந்திய நிறுவனங்கள் வழங்கும் ஜப்பான் முதலீட்டு ரசீதுகள் மூலம் நிதியளிக்கப்படுகிறது.
4) மேற்கத்திய பிரத்தியேக சரக்கு பெருவழிகள் (Dedicated Freight Corridors) மூலம் வழங்கப்படும் ''அதிவேக - அதிக திறன்'' இணைப்பை மேம்படுத்துவதன் மூலம் எதிர்கால தொழில்துறை நகரங்களை உருவாக்குவதை DMIC திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ii. பெங்களூர் - மும்பை தொழில்துறை வழித்தடம்.

Banglore – Mumbai Industrial Corridor.

1) மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவை உள்ளடக்கியது.
2) இது பிரிட்டனின் (UK) உதவியுடன் உருவாக்கப்படுகிறது.
3) தில்லி மும்பை தொழில்துறை தாழ்வார மேம்பாட்டுக் கழகம் (DMICD) மற்றும் UK வர்த்தகம் மற்றும் முதலீடு (UKTI) ஆகியவை முறையே இந்திய மற்றும் இங்கிலாந்து தரப்பில் நோடல் ஏஜென்சிகளாக தீர்மானிக்கப்பட்டுள்ளன.

iii. பாதுகாப்பு தொழில்துறை வழித்தடம்.

Defence Industrial Corridor.

தற்போது, இந்தியாவில் இரண்டு பாதுகாப்பு தொழில்துறை தாழ்வாரங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன, ஒன்று உத்தரபிரதேசத்திலும் மற்றொன்று தமிழ்நாட்டிலும். பல தனியார் நிறுவனங்கள், பாதுகாப்பில் சுயசார்பு என்ற நாட்டின் பார்வையை அடைய இந்திய அரசுடன் கைகோர்க்கும்.

உத்தரபிரதேச பாதுகாப்பு தொழில்துறை வழித்தடம்.

1) உத்தரபிரதேச பாதுகாப்பு தொழில்துறை தாழ்வாரம் உத்தரபிரதேச விரைவுச்சாலை தொழில்துறை மேம்பாட்டு ஆணையம் அல்லது UPEIDA ஆல் உருவாக்கப்படுகிறது.
2) உத்தரபிரதேச பாதுகாப்பு தொழில்துறை வழித்தடத்தை உருவாக்க உத்தரபிரதேசத்தில் மொத்தம் 196.7853 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடம்.

1) தமிழ்நாடு வழித்தடம் தமிழ்நாடு மாநில அரசால்(TIDCO) நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு வருகிறது.
2) தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடத்தை உருவாக்க தமிழ்நாட்டில் மொத்தம் 283.28 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.
3) இது சென்னை, கோவை, ஓசூர், சேலம் மற்றும் திருச்சி மாவட்டத்தை உள்ளடக்கியது.

8. இந்தியாவில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அகழாய்வுபற்றி விரிவாக விளக்குக.

Explain in detail about Petroleum and natural gas explorations in India.

1) பொருளாதாரத்தின் மற்ற அனைத்து முக்கிய பிரிவுகளுக்கும் முடிவெடுப்பதில் செல்வாக்கு செலுத்துதல்.
